செ.வெ.எண். 619 நாள்– 30.7.2008

# செய்தி வெளியீடு

## சிறப்புப் பொது விநியோகத் திட்டம் மேலும் ஓராண்டிற்கு நீட்டிப்பு முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

அத்யாவசியப் பொருள்களின் விலைவாசியைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் கடந்த ஆண்டு கொண்டு வரப்பட்ட தமிழக அரசின் சிறப்புப் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, பாமாயில், ரவை, மைதா மற்றும் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு ஆகியவைகளை குடும்ப அட்டைதாரர்களுக்கு ஏப்ரல் 2007 முதல் நியாய விலைக் கடைகளின் மூலமாக தமிழக அரசு வழங்கி வருகிறது. இத்திட்டத்திற்கு பொதுமக்களிடமிருந்து கிடைத்து வரும் பெரும் வரவேற்பினையும், வெளிச் சந்தை விலையையும் கருத்தில் கொண்டு இத்திட்டத்தினை மேலும் ஓராண்டிற்கு ஜூலை 2009 வரை நீட்டித்து செயல்படுத்திட முதலமைச்சர் கலைஞர் இன்று (30.7.2008) ஆணையிட்டுள்ளார்.

* * *

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9